**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள் : 30.09.2024**

**வழக்கு எண் : OS. 54/2023**

**சாட்சி பெயர் : திரு.மதிமாணிக்கம்/ PW.2**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. பாக்கியத்தாயம்மாள் ஓய்வு பெற்ற ஆசிரியை என்றால் சரிதான். அவர் இறக்கும் காலம் வரை எனக்குத்தெரியும். என்னுடன் நல்ல உறவில் இருந்தார்.
2. வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை வாதிகளுக்கும் காலம் சென்ற ஜெயமாணிக்கத்தின் வாரிசுகளுக்கும் ச நல்ல உறவு தான் என்றால் சரிதான்.
3. பாக்கியத்தாயம்மாள் அவரது சொத்துக்களை பொறுத்து 13.04.2006 தேதியன்று ஒரு உயில் ஆவணம் பிறப்பித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது.
4. ஒரே வீட்டில் தென்பகுதியில் பாக்கித்தாயம்மாளும், வடபகுதியில் வாதிகளும் வசித்தனர் என்றால் சரிதான்.
5. பாக்கியத்தாயம்மாளின் அவரது சொத்துக்களை பொறுத்து ஜெயமாணிக்கம் மற்றும் வளர்மதி மற்றும் கலாமணி வசந்தா என்பவருக்கும் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.
6. பாக்கியத்தாயம்மாளின் இறப்பிற்கு பின்பு 1வது தபசில் 1வது அயிட்ட சொத்தும் 3வது இலக்க சொத்தின் கிழக்கு பகுதி 3 சென்டும் ஜெயமாணிக்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.
7. ஜெயமாணிக்கத்தின் இறப்பிற்கு பின்பு அவரது சொத்துக்கள் அவரது வாரிசுகளான 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.
8. 6 முதல் 8 பிரதிவாதிகள் உயில் ஆவணம் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்களை 25.11.2019 தேதி ஏற்பாடு ஆவணம் மூலமாக 9வது பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.
9. 01.06.1989 தேதியில் பாக்கியத்தாயம்மாள் அவரது சொத்துக்களை பேசில் தியாகராஜனுக்கு கிரைய ஒப்பந்தம் பிறப்பித்துக்கொடுத்தார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
10. கிரையத் தொகையை பாக்கியத்தாயம்மாள் பெற்றுக்கொண்டு கிரைய அனுபவத்தை பேசில் தியாகராஜனுக்கு ஒப்படைத்து விட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**11.** 01.06.1989 தேதியிலோ அல்லது வேறு தேதியிலோ பாக்கியத்தாயம்மாள் கிரைய ஒப்பந்தம் எதுவும் பிறப்பித்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**12.** கிரைய ஒப்பந்தத்தில் ஜெயமாணிக்கம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**13.** 23 சென்ட் நிலத்தையும் பேசில் தியாகராஜன் அனுபவித்து வந்ததாகவும் தற்போது வாதிகள் அனுபவித்து வருவதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**14.** பிரதிவாதிகள் ஜெயமாணிக்கத்தை விட்டு பிரிந்திருந்தார்கள் என்றும் திருவைகுண்டத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**15.** 2020 ஆண்டு முதல் வாதி, பிரதிவாதிகளிடம் பாகப்பிரிவினை கேட்டு வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**16.** பாக்கியத்தாயம்மாள் துவக்கபள்ளி ஆசிரியை ஆவார். நல்ல புத்தியுடையவர் ஆவார்.

**17.** வாதிகளுக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-கே.நம்பிராஜன்
**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**